[ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப்பதிப்புரிமையுடையது / *All Rights Reserved*]



# மத்துகம கல்வி வலயம்

## இரண்டாம் தவணை பரீட்சை - 2023

| தரம் : 10 | பாடம் : வரலாறு | பத்திரம் : I | காலம் : 01 மணி/லம் |
|---|---|---|---|

பெயர் : ........................................................................................................................................

**அறிவுறுத்தல்கள்**

- **பகுதி Iஇல் 01 முதல் 40 வரையான வினாக்களுக்கான மிகச்சரியான விடைகளை தெரிவு செய்க.**
- **வினாத்தாளில் தெரிவு செய்த விடைகளுக்கான விடை இலக்கங்களை உங்களுக்கு வழங்கப்படும் புள்ளடித் தாளில் × எனும் அடையாளத்தை இடுக.**

## பகுதி I

(01). புராதன அறிஞர்களால் பல்வேறு காலப்பகுதியில் எழுதப்பட்ட நூல்கள் மற்றும் ஆவணங்கள் எந்த மூலாதாரத்தில் உள்ளடங்கும் ?
1. நாணய மூலாதாரம் 2. அகழ்வாராய்ச்சி மூலாதாரம்
3. இலக்கிய மூலாதாரம் 4. தொல்பொருள் மூலாதாரம்

(02). நம் நாட்டின் அரசியல் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ள நூல் எது ?
1. போதிவம்சம் 2. பூஜாவலிய 3. ராஜாவலிய 4. நிக்காய சங்கிரஹ

(03). நம் நாட்டில் கிடைக்கப்பெற்ற மிகப் பழமையான நாணயம் எது ?
1. பொன் நாணயம் 2. கஹபன நாணயம் 3. வெள்ளி நாணயம் 4. அக நாணயம்

(04). கரையோர வெட்டவெளி பிரதேசம் உள்ளடங்கும் காலநிலை வலயம் எது ?
1. ஈர வலயம் 2. தாழ்நில உலர் வலயம் 3. அரைவரல் வலயம் 4. வரல் வலயம்

(05). வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் உப்பை பயன்படுத்தியுள்ளான் என ஆதாரம் கிடைத்துள்ள இடமாக அமைவது எது ?
1. கித்துள்கல குகை 2. இராவணா எல்ல குகை
3. பாகியங்கல குகை 4. பட்டதொம்பலென குகை

(06). தொழிநுட்ப ரீதியில் நோக்கும் போது இடைப்பட்ட யுகம் என நாம் கருதப்படும் காலம் எது?
1. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் 2. முன் வரலாற்றுக் காலம்
3. ஆரம்ப வரலாற்று காலம் 3. வரலாற்று காலம்

(07). அகழ்வாராய்ச்சியின் மூலம் முன் வரலாற்றுக் காலத்திற்குரியது என நம்பப்படும் மயானங்கள் இரண்டு கண்டுபிடிக்கப்பட்ட ஊவா மாகாணத்தில் உள்ளடங்கும் இடங்கள் இரண்டு
1. இப்பன்கடுவ, யட்டிகல்பொத்த 2. ஹல்துமுல்ல, பெரகல
3. பெரகல, யட்டிகல்பொத்த 4. இப்பன்கடுவ, பெரகல

(08). ஆரம்ப வரலாற்று காலத்தில் உலர் வலய பிரதேசங்களில் குடியேற்றங்கள் அதிகரிப்பதற்கு ஏதுவாக அமைந்த பிரதான காரணி எது?
1. வளமான மண் 2. தகுந்த காலத்தில் மழை கிடைத்தல்.
3. இயற்கை வளங்களின் பரம்பல் 4. வெள்ளப்பெருக்கு

(09). திஸ்ஸமகாராம குளத்தை கட்டிய மன்னன் யார் ?
1. தீசன் 2. வசபன் 3. மகாநாகன் 4. இளநாகன்

(10). புராதன காலத்தில் பட்டாணகாம என்று அழைக்கப்படுவது எது ?
1. தச்சர் கிராமம் 2. மீனவ கிராமம்
3. துறைமுகத்தை அண்டிய கிராமம் 4. விவசாயிகள் கிராமம்

(11). **எல்லங்காவ** என அழைக்கப்படும் குளத்தொகுதியை புராதன மக்கள் அமைத்தமைக்கான காரணங்களில் ஒன்று எது ?

1. நீரை பாதுகாத்தல் 2. மண்ணரிப்பை கட்டுப்படுத்தல்
3. வெள்ள பெருக்கை கட்டுப்படுத்தல் 3. சூழல் வெப்பச் சமநிலையை பேணல்

(12). எமது நாட்டு தொல்பொருட்களை பாதுகாப்பதற்கான முக்கியத்துவமாக காரணிகளில் ஒன்றாக அமைவது எது ?

1. அவற்றின் பெருமதியை வரையறுக்க முடியாது.
2. புராதன காலத்திற்குரி என்றபடியால்.
3. வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு காண்பிப்பதற்காக.
4. தேசிய பாரம்பரியத்தை எடுத்துக்காட்டுவதற்கு

(13). நாட்டுக்கு மன்னனால் ஆற்ற வேண்டிய பிரதான பணிகளில் உள்ளடங்காதது எது ?

1. நாட்டை பொருளாதார ரீதியில் வளர்ச்சியடைய செய்தல்.
2. நாட்டு மக்களிடம் கட்டாயம் வரியை அளவிடல்.
3. நாட்டு மக்களை பாதுகாத்தல்.
4. நாட்டு மக்களின் கல்வி நிலையை உயர்த்துதல்.

(14). நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் கல்வெட்டுகளை உருவாக்கிய இலம்பகர்ண வம்ச அரசன் யார் ?

1. வசபன் 2. மகாசேனன் 3. காசியப்பன் 4. எல்லாளன்

(15). இலங்கையை **சிவப்புத் தீவு** என பெயரிட்டு அழைத்தவர் எந்நாட்டைச் சேர்ந்தவர் ?

1. அரேபிய - இபின் பதுதா 2. அரேபிய - அல்பல சூரி
3. கிரேக்க - தொலமி 4. சீனா - ஹியுங்சாங்

(16). புராதன காலத்தில் மகாவலி கங்கையின் கிளை நதியான அம்பன் கங்கையை மரித்து உருவாக்கப்பட்ட கால்வாய் எது ?

1. மினிப்பே கால்வாய் 2. ஜய கங்கை 3. யோதக் கால்வாய் 4. எலஹர கால்வாய்

(17). புராதன காலத்திலிருந்து இலங்கை வெளிநாட்டு வர்த்தகத்தில் முக்கியமான இடத்தில் இருந்தமைக்கான பிரதான காரணியாக அமைவது எது ?

1. இந்து சமுத்திரத்தில் ஒரு தீவாக காணப்படுகின்றமை.
2. பயிர் ஏற்றுமதி வர்த்தகம் காணப்பட்டமை.
3. இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ளமை.
4. இலங்கையர் வர்த்தகத்தை பிரதான தொழிலாக கொண்டிருந்தமை

(18). குளத்தொகுதி பற்றியும் அக்குளத்தொகுதியோடு இணைந்துள்ள பல கிராம மக்களின் சுபீட்சமான வாழ்க்கை நிலை பற்றியும் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் புராதன காலத்தில் யாருக்கு வழங்கப்பட்டிருந்தது ?

1. பருமகமார்கள் 2. கமிகமார்கள் 3. சேனாதிபதிகள் 4. தசகம் எத்தன்

(19). புராதன இலங்கையின் விவசாயிகள் வாழ்ந்த கிராமம் எவ்வாறு அழைக்கப்பட்டது

1. மணிகார காம 2. கேவட்ட காம 3. கும்பக்கார காம 4. கசீகார காம

(20). இலங்கையில் அதிகார பரவலாக்கம் ஆரம்பித்தது அதிகார பகிர்வு முறையின் ஊடாக ஆகும். அவ்வாறான முறை அழைக்கப்படும் விதம் எது ?

1. மத்திய மயப்பட்ட ஆட்சி 2. அதிகார பரவலாக்கப்பட்ட ஆட்சி
3. ஒற்றையாட்சி 4. முடியாட்சி

(21). குளக்கட்டு அரிக்கப்படுவதை தடுப்பதற்காக உருவாக்கப்பட்ட குளத்தின் பகுதி எது ?

1. கலிங்கல் 2. உள்வான் கதவு 3. கலிங்கல் தொட்டி 4. அலைத்தாங்கி

(22). இலங்கையர் முதன் முதலாக வீடு கட்ட ஆரம்பித்தது முன் வரலாற்றுக் காலத்திலேயே ஆகும். அந்த அடிப்படையில் கி.மு 1129ஆம் ஆண்டு கட்டப்பட்டிருக்கலாம் என நம்பப்படும் வீட்டின் சிதைவுகள் எந்த மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டது ?

1. இரத்தினபுரி 2. கண்டி 3. அம்பாந்தோட்டை 4. களுத்துறை

(23). பத்தினி தெய்வ கோவில் திறப்பு விழாவிற்கு தென்னிந்தியாவின் சேர நாட்டு அரசனின் அழைப்பின் பேரில் அந்நாட்டிற்கு சென்ற இலங்கை அரசன் யார் ?

1. இளநாகன் 2. மானவர்மன் 3. மகாசேனன் 4. கஜபாகு

(24). பின்வரும் கூற்றுக்களுள் அனுராதபுர இராச்சிய காலத்திற்கு பொருந்தாத கூற்று எது ?

1 இலங்கைக்கு பௌத்த சமயம் அறிமுகமாதல்.

2. மகாசேன மன்னனால் மின்னேரியா குளம் உருவாக்கப்படல்.

3. கலிங்க மாகன் இலங்கையை ஆக்கிரமித்தல்.

4. வலகம்பா அரசனால் திரிபீடகம் உருவாக்கப்படல்.

(25). ஒழுங்காக திட்டமிடப்பட்ட தொழிநுட்பங்கள் காணப்படக்கூடிய மற்றும் அலங்கார வேலைபாடுகளுடன் கூடிய இலங்கையின் பண்பாட்டை வெளிப்படுத்தும் நீர் பூங்கா எது ?

1.சீகிரிய பூங்கா 2.ரன்மசு பூங்கா 3.மகாமேகவனப் பூங்கா 4.பேராதனை தாவரவியல் பூங்கா

➢ **இலக்கம் 26 முதல் 30 வரை உள்ள வினாக்களில் அ மற்றும் ஆ பகுதிகளை இணைக்கும் போது கிடைக்க பெறும் சரியான விடை தொகுதியை கண்டறிக.**

(26). கீழே தரப்பட்டுள்ள **அ** மற்றும் **ஆ** பகுதியை இணைக்கும் போது கிடைக்கும் சரியான விடை எது?

| **அ** | **ஆ** |
|---|---|
| 1. இரும்பு பாவனை | A. வரலாற்று காலம் |
| 2. கற்கருவிகள் பயன்பாடு | B. முன் வரலாற்றுக் காலம் |
| 3. நதிக்கு குறுக்காக அணை கட்டுதல் | C. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் |

1. ABC 2. BCA 3. ACB 4. CBA

(27). புராதன இலங்கையில் பின்வரும் பகுதிகளுக்கு பொறுப்பாக இருந்து அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட பதவிப் பெயர்களை கண்டறிக ?

| **அ** | **ஆ** |
|---|---|
| 1. குடும்பத் தலைவர் | A. கமிக |
| 2. குளத் தொகுதிகளின் தலைவர் | B. குர்ஹபதி |
| 3. கிராமத்தலைவர் | C. பருமக |
| 4. பருமகமார்களின் தலைவர் | D. மகா பருமக |

1. ABCD 2. BCAD 3. CBDA 4. BDAC

(28). கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களுக்கு பொருத்தமான மன்னர்களை இணைக்கும் போது கிடைக்கும் விடை தொகுதியை காண்க ?

| **அ** | **ஆ** |
|---|---|
| 1. நாடெங்கும் வைத்தியசாலை அமைத்தல் | A. முதலாம் உபதிஸ்ஸ |
| 2. பிரசவ விடுதி அமைத்தல் | B. பண்டுகாபயன் |
| 3. சொத்திசாலா அமைத்தவர். | C. முதலாம் விஜயபாகு |
| 4. காலிங்க அரசுடன் உறவு மேற்கொண்டவர். | D. புத்ததாச மன்னன் |

1. ABCD 2. BCAD 3. CBDA 4. BDAC

(29). ஒரு குளத்தின் பகுதிகள் மூலம் ஆற்றப்படும் பணிகளை சரியான முறையில் இணைப்பதன் மூலம் கிடைக்கும் விடைத்தொகுதி எது ?

| அ | ஆ |
|---|---|
| 1. வெளிவான் கதவு | A. குளத்தின் கழிவு சேற்றை அகற்றுதல். |
| 2. தாழ்கலிங்கல் | B. குளக்கட்டு அரிக்கப்படுவதை தடுத்தல். |
| 3. குளக்கட்டு | C. குளத்தின் மேலதிக நீரை வெளியேற்றல். |
| 4. அலைத்தாங்கி | D. குளத்துக்கான நீரை தேக்கி வைத்தல் |

1. ABCD    2. BCAD    3. CADB    4. DCAB

(30). கீழே தரப்பட்டுள்ள கைத்தொழில்களுக்கு பொருத்தமான புராதன கால சிங்கள மொழிப் பெயர்களை இணைக்கும் போது கிடைக்கும் விடை தொகுதி எது ?

| அ | ஆ |
|---|---|
| 1. மாணிக்கம் அகழ்வு அல்லது பட்டை தீட்டுதல். | A. கும்பக்கார |
| 2. பொன் ஆபரண தொழில் | B. மணிகர |
| 3. மண்பாண்ட உற்பத்தியாளர் | C. கபர |
| 4. இரும்புருக்கு தொழிலாளி | D. துலாதர |

1. ABCD    2. BDAC    3. CDAB    4. DCAB

(31). இலங்கையில் இரும்புருக்கு கைத்தொழில் சிறப்பாக இடம் பெற்றுள்ளமையை சான்றுபடுத்தும் புராதன இரும்புருக்கு சூளை கிடைக்கப்பெற்ற இடம் அமைந்துள்ள பிரதேசம் எது ?

1. தென் மாகாணம் - மாகம    2. வட மாகாணம் - நாகதீபம்
3. கிழக்கு மாகாணம்  தீகவாபி    3. சப்ரகமுவ மாகாணம் - சமனலவெவ

(32). புராதன உலர் வலய மக்கள் குளத்தொகுதியை எப்பெயர் கொண்டு அழைத்தனர் ?

1. ஒலகம்    2. எல்லங்காவ    3. நிந்தகம்    3. விகாரகம்

(33). புராதன காலத்தில் மத்திய அரசின் கீழ் பிரதேச ஆட்சி நடைபெற்றமையை சான்றுபடுத்தும் ஆதாரமாக அமைவது எது ?

1. வல்லிபுர பொற்சாசனம்    2. பனாகடுவ செப்பேடு
3. சித்துல்பவ்வ கல்வெட்டு    3. பொலன்றுவை கல்வெட்டு

(34). புராதன காலத்தில் இந்துக்கள் வழிபாடு செய்வதற்காக கோகர்ண துறைமுகத்தின் அருகில் உருவாக்கிய கோவில் எது ?

1. திருக்கேதீஸ்வரம்    2. திருகோனேச்சரம்    3. நல்லூர் கோயில்    3. கந்தசாமி கோயில்

(35). புராதன காலம் முதல் இலங்கையில் பல கலாசாரத்தை பின்பற்றும் மக்கள் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளனர். அதன்படி நோக்கும் போது மலாயா குடா நாட்டிலிருந்து இலங்கை வந்தோருக்கு வழங்கப்பட்ட பெயர் என்ன ?

1. கிரேக்கர்கள்    2. அயோனியன்கள்    3. காம்போஜகர்கள்    4. ஜாவகர்கள்

(36). புராதன காலத்தில் இருந்து இலங்கையில் மட்பாண்ட கைத்தொழில் காணப்பட்டமையை உறுதி செய்யும் வர்ண மட்பாண்ட துண்டுகள் கிடைக்கப்பெற்ற இடம் எது ?

1. ஜேத்தவனராம அகழ்வு    2. அபயகிரி அகழ்வு    3. மிரிசவெட்டிய அகழ்வு    4. தூபாராம அகழ்வு

(37). புராதன கால அரசர்களால் குளத்து நீரை பயன்படுத்துவதற்காக அறவிடப்பட்ட வரி எது ?

1. மதர மஞ்சக்க　　2. தக்கபதி　　3. போஜக்கபதி　　4. கெதி அட

(38). வாசனை மிக்க நெய்யில் சமைக்கப்பட்ட மயில் இறைச்சியும் தவிட்டுடனான அரசியல் சமைத்த சோற்றையும் 12ஆம் நூற்றாண்டில் இலங்கையில் வாழ்ந்த செல்வந்தர்கள் அதிகம் விரும்பி உட்கொண்டனர் எனக் கூறும் நூல் எது ?

1. சதர்ம ரத்னாவலிய　　2. சத்தர்மாலங்கார　　3. புதுகுண அலங்காரய　　4. சாராசங்கரஹ

- **கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களை கொண்டு, 39ஆம் 40ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

A. நாட்டில் பிராந்திய ஆட்சி முறையை சிறப்பாக நடைமுறைப்படுத்தி மன்னன்.

B. முதன் முதலாக இலங்கையில் பெருங்குளங்களை கட்ட ஆரம்பித்த மன்னன்.

C. பிராந்திய தேவை கருதி சர்வதேச ரீதியில் சாதகமான முயற்சிகளில் ஈடுபட்ட மன்னன்.

D. ருவான்வெலிசாய தூபியை கட்டுவதற்கு உதவிய நபர்களுக்கு நகரின் நாட்புற வாசல்களில் இருந்து தானம் வழங்கிய மன்னன்.

E. அரச குடும்பத்தை பாதுகாத்த சித்தாரும்பி புதல்னாவிற்கு நன்றி கடனாக வழங்கிய பொருட்கள் பற்றிய விபரம் அடங்கிய பனாகடுவ செப்பு சாசனத்தை உருவாக்கியவர்.

(39). மேலே குறிப்பிட்டுள்ள கூற்றுகளில் வசப மன்னனுக்கு பொருத்தமான கூற்றுக்கள் எவை ?

1) A , B　　2) B , C　　3) C , D　　4) D , E

(40). மேலே குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுக்களில் முதலாம் விஜயபாகுவின் சேவைகளாக கருதக்கூடிய கூற்றுக்கள் எவை ?

1) A , B　　2) B , C　　3) D , E　　4) A , E

(40×02 = 80 புள்ளிகள்)

පියලු ම ☐ කම් ඇවරිනී / முழுப்பதிப்புரிமையுடையது / *All Rights Reserved]*



## இரண்டாம் தவணை பரீட்சை - 2023

| தரம் : 10 | பாடம் : வரலாறு | பத்திரம் : II | காலம் : 03 மணி/லம் |
|---|---|---|---|

பெயர் : ..........................................................................................................................................

**அறிவுறுத்தல்கள்**

- பகுதி Iஇல் உள்ள முதலாம் வினா கட்டாயமானது.
- பகுதி IIஇல் உள்ள ஆறு வினாக்களுள் ஏதேனும் **ஐந்து** வினாக்களை தேர்வு செய்து, மொத்தமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

(01). (அ). கீழே வினா இல i இல் தரப்பட்டுள்ள இடங்களை இலங்கைப் படத்திலும் வினா இல iiஇல் தரப்பட்டுள்ள இடங்களை உலகப்படத்திலும் குறித்துப் பெயரிடுக.

i. கலா ஓயா, மாணிக்க கங்கை, கம்பளை, இப்பன்கடுவ, சேனாநாயக்க சமுத்திரம், இரணைமடு குளம், திசாவாவி, கதிர்காமம், பூந்தல, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை, பெற்றிக் கோட்டை, ஊரா தோட்டை (12 புள்ளிகள்)

ii. கள்ளிக்கோட்டை, ஜாவா தீவு, பாரசீகக்குடா, டோக்கியோ, மியன்மார், குவாங்கோ நதி (06 புள்ளிகள்)

(ஆ). கீழே A ,B , C ,D என்ற எழுத்துக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்களுக்கு பொருத்தமான விடைகளை கண்டறிக.


A. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் பயன்படுத்தியதாக நம்பப்படும் கல்லாயுதங்களுக்கு வரலாற்று ஆய்வாளர்கள் வழங்கும் பெயர்.

B. புராதன அலகபய மகாராஜா என அழைக்கப்படும் அரசன்

C. இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முன்பு நீதித்துறை பற்றிய நிபுணத்துவம் பெற்றோருக்கு வழங்கப்படும் பெயர்

D. பாரிய மட்பாண்டத்தை பூமியில் புதைத்து அதன் நூல் நீர் சேமிப்பதற்காக உருவாக்கப்பட்ட கிணறு (04 புள்ளிகள்)

(இ). கீழே A ,B எழுத்தில் காட்டப்படும் படங்களுடன் சம்பந்தப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.



i. படத்தில் காட்டப்படும் நிர்மாணத்தை பெயரிடுக ?

ii. இது கிடைக்கப்பெற்ற இடம் எது ?

iii. இதனை உருவாக்குவதற்கு பயன்படுத்தப்பட்ட கருவி எது ?

iv. இக்காலப் பகுதியில் இவ்வாறான நிர்மாணம் கிடைக்கப்பெற்ற மற்றுமொரு இடத்தை பெயரிடுக ?

(04 புள்ளிகள்)



படம் : B

1. படம் Bஇல் காட்டப்படும் காட்சி என்ன ?
2. இவ் உருவம் எந்த காலத்தில் வரையப்பட்டுள்ளது ?
3. இச்சித்திரத்தை காணக்கூடிய இடம் எது?
4. அச்சித்திரத்தில் உள்ள பழங்கள் 02 ஐ பெயரிடுக ?

(04 புள்ளிகள்)

## பகுதி - ii

**(02).** i. கல்வெட்டு என்றால் என்ன ? (03 புள்ளிகள்)

ii. இலக்கிய மூலாதாரங்களின் மூலம் கிடைக்கும் பயன்கள் 02 தருக ? (04 புள்ளிகள்)

iii. வரலாறு கற்பதால் கிடைக்கும் பயன்கள் 02 கூறி, சுருக்கமாக விளக்குக ? (05 புள்ளிகள்)

iv. இலங்கையர் என்ற அடிப்படையில் தொல்பொருள் மூலாதாரங்களை பாதுகாப்பதன் முக்கியத்துவங்கள் 03ஐ கூறி, விளக்குக ? (06 புள்ளிகள்)

**(03).** i. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்ததாக நம்பப்படும் கரையோர வெட்டவெளிப் பிரதேசம் 01ஐயும் மலைநாட்டு வெட்டவெளி பிரதேசங்கள் 02ஐயும் பெயரிடுக ? (03 புள்ளிகள்)

ii. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தையும் முன்வரலாற்றுக் காலத்தையும் வேறுபடுத்தி காட்டக்கூடிய காரணிகள் 02ஐ எழுதுக ? (04 புள்ளிகள்)

iii. முன் வரலாற்றுக் கால மனிதன் சற்று உயர்வான தொழில்நுட்பங்களை கையாண்டுள்ளான் என்பதை உறுதிப்படுத்தும் சான்றுகள் 02ஐ கூறி, உதாரணங்களுடன் விளக்குக ? (05 புள்ளிகள்)

iv. வரலாற்று கால மனிதனின் குடியிருப்பின் அமைப்பு மற்றும் தன்மை என்பவற்றை 02 காரணிகள் ஊடாக விளக்குக ? (06 புள்ளிகள்)

**(04).** i. புராதன காலத்தில் அரசுரிமை கைமாற்றப்பட்ட விதங்கள் 03ஐ தருக ? (03 புள்ளிகள்)

ii. கமிகவால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் 02 தருக ? (04 புள்ளிகள்)

iii. பண்டைய சமூகத்தில் வாழ்ந்த மனிதன் தமது பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்கு கையாண்ட வழிமுறைகள் 02ஐ கூறி, உதாரணங்களுடன் விளக்குக ? (05 புள்ளிகள்)

iv. பௌத்த சமயம் வேரூன்றி இருந்த போது இலங்கையில் நிலவிய வேறு சமயங்கள் தொடர்பான உதாரணத்துடன் விளக்குக ? (06 புள்ளிகள்)

**(05).** i. கீழே தரப்பட்டுள்ள குளங்களை உருவாக்கிய மன்னர்களின் பெயர்களை வரிசை கிரமத்தில் எழுது?

A. பசவக்குளம் **B.** மின்னேரியா குளம் C. பதவிய குளம் (04 புள்ளிகள்)

ii. புராதன இலங்கையர் அயல்நாடுகளுடன் சுமூகமான முறையில் தொடர்புகளை மேற்கொண்டிருந்தனர் என்பதனை சான்றுபடுத்தும் இரு காரணிகளை தருக ? (04 புள்ளிகள்)

iii. புராதன இலங்கையரின் சுகாதார மேம்பாட்டுக்காக அரசர்கள் மேற்கொண்ட பொதுச்சுகாதார பணிகள் 02 உதாரணங்களுடன் விளக்குக ? (05 புள்ளிகள்)

iv. புராதன காலத்திலிருந்து இலங்கையில் நிறுவனமயப்பட்ட கல்வி முறைமை காணப்பட்டுள்ளது என்பதை சான்றுப்படுத்தும் இரு காரணிகளை உதாரணங்களுடன் விளக்குக ? (06 புள்ளிகள்)

**(06).** i. அமுக்க விசையை பயன்படுத்தி கல்லாயுதங்கள் செய்யும் தொழில்நுட்பத்திற்கு வழங்கப்படும் பெயர் என்ன ? (03 புள்ளிகள்)

ii. புராதன காலத்தில் பெருங்குளங்களை கட்டுவதற்கு ஏதுவாக அமைந்த காரணிகள் 02ஐ விளக்குக ?

(04 புள்ளிகள்)

iii. நம் நாட்டில் புராதன காலத்தில் நீரியல் தொழிநுட்பம் உயர் மட்டத்தில் இருந்துள்ளது என்பதை சான்றுபடுத்தும் காரணிகள் இரண்டைக்கூறி, உதாரணங்களுடன் விளக்குக ? (05 புள்ளிகள்)

iv. புராதன இலங்கையின் கட்டட கலையின் சிறப்பை அனுராதபுரம் மற்றும் பொலன்னருவை இராச்சிய காலங்களில் காணக்கூடியதாக உள்ளது. இதனை சான்றுப்படுத்தும் காரணிகள் மூன்றை உதாரணங்களுடன் விளக்குக ? (06 புள்ளிகள்)

**(07).** i. புராதன காலத்தில் இலங்கையுடன் தொடர்பை வைத்திருந்த தென்னிந்திய வர்த்தக குழுக்கள் மூன்றை பெயரிடுக ? (03 புள்ளிகள்)

ii. கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடைகளை தருக ?

A. பணம் அச்சிடும் பிரிவின் தலைவர் -

B. இலங்கையில் பயன்படுத்தப்பட்ட வெளிநாட்டு நாணய வகைகள் இரண்டு – (04 புள்ளிகள்)

iii. புராதன சமூகத்தில் பெண்கள் உயர்ந்த நிலையில் கௌரவமானவர்களாக போற்றப்பட்டனர் என்பதை இரு காரணிகள் ஊடாக உதாரணங்களுடன் விளக்குக ? (05 புள்ளிகள்)

iv. புராதன இலங்கையின் ஆட்சியாளர்கள் சூழல் பாதுகாப்பு தொடர்பாக அதிக முக்கியத்துவம் வழங்கியுள்ளனர் என்பதை உறுதிப்படுத்தும் காரணிகள் மூன்றை உதாரணங்களுடன் விளக்குக?

(06 புள்ளிகள்)

# LOL.lk
## BookStore

# විභාග ඉලක්ක
# පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න





| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට

**www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න**